*Chapter XXII Code of Criminal Procedure.)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***DVC. 09/2025***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW–1 Cross Continuation***

*Name / Father's Name:* ***திருமதி.ஜெயபாரதி க/பெ. தமிழ்செல்வன்***

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **11.03.2026.**

**எதிர்மனுதாரர் ஆஜர்.**

துவக்க நேரம் – 11.28 F.N

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1) திருமணத்திற்கு முன்பு நான் வேலைக்கு சென்று மாதசம்பளமாக எவ்வளவு பெற்றேன் என்றால் வேலையில் சேரும்பொழுது 8000/– ரூபாய் சம்பளமாக பெற்றேன், வேலையிலிருந்து நிற்கும்பொழுது 12,000/– ரூபாய் சம்பளமாக பெற்றேன். எனது பெற்றோர்கள் வசதியானவர்களா என்றால் இல்லை, விவசாயம்தான் செய்து வருகிறார்கள். எவ்வளவு நிலம் உள்ளது என்றால் 1–1/4 ஏக்கர் நிலம் உள்ளது. சொந்த வீடு உள்ளதா என்றால் உள்ளது.

2) எனக்கு, எனது பெற்றோர்கள் அனுபவத்தில் உள்ள நிலம் மற்றும் வீட்டில் சட்டப்படி உரிமை உள்ளதா என்றால் உள்ளது. எனது பெற்றோர்கள், எனக்கு மாதமாதம் ஏதாவது தொகை தருகிறார்களா என்றால் எனது கணவர், என்னை விட்டு பிரிந்து சென்ற கடந்த 2–1/4 வருடங்களாக என்னை, எனது பெற்றோர்கள்தான் பராமரித்து வருகிறார்கள், வழக்கு நடத்துவதற்குரிய பணத்தையும் எனது பெற்றோர்கள்தான் கொடுக்கிறார்கள்.

3) நான் தற்பொழுது வேலைக்கு சென்றால் எனக்கு 20,000/–ரூபாய் சம்பளம் தருவார்களா என்றால் இல்லை. நான் தற்பொழுதும் வேலைக்கு சென்று மாத சம்பளமாக ரூ.20,000/– சம்பளம் பெற்று வரும் நிலையில், வழக்கிற்காக நான் வேலைக்கு செல்லவில்லை என்று பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு வேலைக்கு சென்று சம்பாதிக்கும் அளவிற்கு எனக்கு கல்வித்தகுதியும்,

திறமையும் இருக்கிறது என்று சொன்னால் சரிதான். எதிர்மனுதாரரின் வீட்டில் என்னுடன், எனது அம்மாவும், தங்கையும் இருக்கிறார்களா என்றால் இல்லை, எனது அம்மா மட்டும்தான் என்னுடன் இருக்கிறார்.

4) கடந்த 15.02.2025 ம் தேதிமுதல் எதிர்மனுதாரரின் தாயார் பச்சியம்மாள் அந்த வீட்டில் இல்லை என்றால் சரிதான். எனக்கு உடல்நலக்குறைவு எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். எனது உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றிற்கு மாதம் ரூ.5000/- போதுமா என்றால் போதும், ஆனால் வழக்கு நடத்துவதற்கும், எனது கணவர் கொடுக்கும் புகார் சம்மந்தமாக விசாரணை மேற்கொள்ள என்னை அழைக்கும்பொழுது சென்றுவர எனக்கு பேருந்து கட்டணத்திற்கும், வழக்கு செலவுத்தொகைக்கும் மேற்கொண்டு பணம் தேவைப்படுகிறது.

5) நானும், எதிர்மனுதாரரும் பிரிந்த கடந்த 2-1/4 வருடத்தில் நான், எதிர்மனுதாரரின் மீது பல புகார் மனுக்களை கொடுத்தேன் என்றாலும், எதிர்மனுதாரர், என்மீது பல புகார் மனுக்களை கொடுத்துள்ளார் என்று சொன்னால் நான், வாழப்பாடி காவல் நிலையத்தில் ஒருமுறை மட்டும் கொடுத்தேன், தலைவாசல் காவல் நிலையத்தில் இரண்டு புகார்கள் கொடுத்தேன், எதிர்மனுதாரர், என்மீது பல புகார்களை கொடுத்துள்ளார்.

6) எங்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டு கடந்த 2-1/4 வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வருவதால் இனிமேல் சேர்ந்து வாழ்வதற்கு வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல, நான் என் கணவருடன் சேர்ந்து வாழவேண்டும் என்பதற்காக அவரது வீட்டில்தான் இருந்து வருகிறேன். எனது கணவருடன் சேர்ந்து வாழவேண்டும் என்ற எண்ணமே எனக்கு இல்லாமல் வழக்கிற்காக சேர்ந்து வாழவேண்டும் என்று பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

7) கடந்த 12.02.2024 ம் தேதி எதிர்மனுதாரரிடம் சொத்தை என் பெயரில் எழுதிவைக்கச்சொல்லி நிர்பந்தம் செய்து, கொலைவெறி தாக்குதல் செய்ததால் எதிர்மனுதாரர் அவரது வீட்டைவிட்டு உயிருக்கு பயந்து சேலத்திற்கு சென்றுவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. அன்றைய தேதியிலிருந்து எதிர்மனுதாரர் உயிருக்கு பயந்து, எதிர்மனுதாரரின் அம்மா பெயரில் உள்ள வீட்டிற்கு வரவில்லை என்று சொன்னால் சரியல்ல, அவ்வாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை, கடந்த 12.02.2024 அன்று காரில் பிரகாஷ், காசி, அன்புச்செல்வி மற்றும் ராமச்சந்திரன்

ஆகியோர்கள் மட்டும் வந்து, ஏன் பிரிந்து வாழ்கிறீர்கள் என்று கேட்டதை எதிர்மனுதாரர் அடிக்க வந்ததாக தவறாக எண்ணி புகார் கொடுத்துவிட்டார், நாங்கள், எதிர்மனுதாரரை ஒருபோதும் அடித்ததில்லை, பெண் கொடுத்துவிட்டோம், நம்முடைய பெண் அங்கு வாழவேண்டும் என்பதற்காக அமைதியாக நடந்துகொள்கிறோம், அடிப்பது ஒன்றும் பெரிய விஷயமே இல்லை.

8) எனக்கு அந்த வீட்டிலேயேதான் இருக்க வேண்டுமா என்றால் ஆமாம். அதே வசதியுள்ள வேறு ஒரு வீட்டில் எனக்கு வசிப்பதற்கு விருப்பமா என்றால் இல்லை. எனது திருமணத்திற்கு முன்பு எனது பெற்றோர் வீட்டில் உள்ள வசதி, வாய்ப்புகளுடன் உள்ள வீட்டில் வசிப்பதற்கு நான் தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். எனக்கு வீட்டு வாடகைக்கு மாதம் ரூ.5000/– போதுமா என்றால் போதும், ஆனால் எனக்கு வாடகை வீட்டிற்கு போக விருப்பமில்லை.

9) நான் தற்பொழுது குடியிருக்கும் வீடு மற்றும் வீட்டை சுற்றியிருக்கும் நிலம் ஆகியவை தலைவாசல் பைபாஸ் ரோட்டை ஒட்டியுள்ள பாரதியார் மகளிர் கல்லூரியை ஒட்டியுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த நிலம் மதிப்புமிக்க நிலமா என்றால் ஆமாம். அந்த சொத்தை யாருக்கு எழுதிவைத்தாலும் அதுபற்றி எனக்கு கவலையில்லை என்று சொன்னால் சரிதான், எனக்கு எனது கணவர் மட்டும்தான் முக்கியம்.

10) எனது கணவர் அவரது அம்மா பெயரில் எழுதிவைத்த கிரயபத்திரம் செல்லாது என்று ஒரு வழக்கு போட்டுள்ளேனா என்றால் போட்டுள்ளேன், சொத்தை விற்க பார்த்தார்கள், அதனால் வழக்கு போட்டிருந்தேன். அந்த சொத்து 10 ஏக்கர் நிலமா என்றால் ஆமாம். அதில் யார் யாருக்கு எவ்வளவு பங்கு உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

11) நான் கூலிகொடுத்து வெட்டிய மஞ்சளை விற்றுவிட்டேனா என்றால் இல்லை, தற்பொழுதும் காட்டில் மக்கிய நிலையில் உள்ளது. எதிர்மனுதாரரின் தாயார் பச்சியம்மாள், நான் வசிக்கும் வீட்டில் CCTV கேமரா வைப்பதற்கும், பயிர் அறுவடை செய்வதற்கும் சென்னை, உயர் நீதிமன்றத்தில் பாதுகாப்பு வழங்கக்கோரி Writ மனு தாக்கல் செய்து அந்த Writ மனுவில் கடந்த 25.10.2025ம் தேதியில் எதிர்மனுதாரரின் தாயார் கொடுத்த புகார் மனுவில் இருதரப்பினரையும் அழைத்து விசாரித்து மேல் நடவடிக்கை எடுக்க அறிவுருத்தி முடிக்கப்பட்டதா என்றால் ஆமாம், எதிர்மனுதாரரின் தாயார் 2025ம் வருடம் பிப்ரவரி 15ம் தேதியே காட்டைவிட்டு வெளியேறிவிட்டதாக

சொல்லியுள்ள நிலையில் பொய்யான சங்கதிகளை உள்ளடக்கி மேற்படி Writ மனுவை தாக்கல் செய்துள்ளார். நான் மேற்படி Writ மனுவில் சொல்லிய நிபந்தனைகளை நிறைவேற்றவிடாமல் எனது செல்வாக்கை பயன்படுத்தி தலைவாசல் காவல் நிலையத்தாரை தடுத்துவிட்டதால் அந்த Writ மனுவின் பேரில் எதிர்மனுதாரரின் தாயார் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கையை எடுத்துள்ளாரா என்றால் தலைவாசல் காவல் நிலையத்தில் விசாரணை நடத்திக்கொண்டிருந்தபொழுது எதிர்மனுதாரரின் தாயாரும், எதிர்மனுதாரரும் காவல்நிலையத்தை விட்டு வெளியே வந்துவிட்டார்கள்.

12) நானும், எனது அம்மா, அப்பா, எனது இளைய சகோதரி ஆகிய நான்குபேரும், எதிர்மனுதாரரை அந்த வீட்டில் இருந்து அடித்து வெளியே துறத்திவிட்டு, தற்பொழுது நாங்கள் நான்குபேரும்தான் அங்கு வசித்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரரின் தாயாருக்கு 65 வயது இருக்குமா என்றால் 60 வயது இருக்கும். எதிர்மனுதாரரின் தாயாரின் தாயாருக்கு 80 வயது இருக்குமா என்றால் இருக்கும்.

13) எனது உறவினர் பச்சமுத்து என்பவர் பா.ம.க கட்சியில் கிழக்கு மாவட்ட தலைவராக உள்ளதால், அவர் அவரது செல்வாக்கை பயன்படுத்தி, எனக்கு ஆதரவாக காவல் நிலையம் மற்றும் எல்லா இடத்திலும், எல்லா அரசு அலுவலகங்களிலும் எனக்கு ஆதரவாக செயல்படவைத்துள்ளார் என்ற சொன்னால் சரியல்ல, பச்சமுத்து என்பவர் எனது அக்காவின் மாமனார் என்பதால், எனக்கு நெருங்கிய உறவினர், எங்கள் வீட்டில் ஆண் பிள்ளைகள் இல்லை என்பதால் எங்கள் வீட்டில் நடக்கும் நல்லது, கெட்டது அனைத்திற்கும் அவர்தான் முன்னின்று நடத்துவார், அதுபோல் இந்த பிரச்சனையிலும் என்னுடன் வந்து செல்கிறார்.

14) எதிர்மனுதாரர் தற்பொழுது என்ன தொழில் செய்து வருகிறார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, ஆனால் அவர் சேலத்தில் உள்ளார் என்பது மட்டும் தெரியும். எதிர்மனுதாரர் தற்பொழுது சேலம், அரசு சட்டக்கல்லூரியில் முதலாமாண்டு மாணவராக படித்து வருகிறார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் செய்த கொடுமையின் காரணமாக எதிர்மனுதாரர் அரசு சட்டக்கல்லூரியில் பயின்று வரும் நிலையில் பராமரித்துக்கொள்ள இயலாத நிலையில் வாழ்ந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல, எதிர்மனுதாரர், என்னை திருமணம் செய்துவிட்டு எனக்கு எந்தவித அத்தியாவசிய தேவைகளையும் பூர்த்தி செய்யாமல் இருந்து வருகிறார்.

15) எனக்கு கல்வித்தகுதியும், உடல்திறனும் உள்ள நிலையில் நான், தன்னைத்தானே பராமரித்துக்கொள்ளும் நிலையில் உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல, எதிர்மனுதாரர் கோவை, PSG கல்லூரியில் MCA படித்துள்ளார், தற்பொழுது எனக்கு பராமரிப்பு தொகை கொடுக்கவேண்டும் என்பதற்காக சட்டப்படிப்பு படிப்பதாக பொய்யாக சொல்கிறார்.

16) நான் குடும்ப வன்முறை சட்டத்தின் கீழ் மனுத்தாக்கல் செய்ய எனக்கு தகுதியில்லை என்று சொன்னால் சரியல்ல, நான் குடியிருக்கும் எதிர்மனுதாரருடைய வீட்டின் அனைத்து கதவுகள் மற்றும் வீட்டின் மேல் உள்ள டேங்கிற்கு செல்லும் பைப் மற்றும் கிணற்றில் உள்ள மோட்டார் உள்ளிட்டவைகளை அடித்து உடைத்து நான் குடியிருக்க முடியாத நிலையை உருவாக்கிவிட்டார்கள், நான் மீண்டும் அவற்றை எல்லாம் சரிசெய்து வாழ்ந்து வருகிறேன்.

17) நான், சட்டத்தை தவறாக பயன்படுத்தி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல, எனக்கு நடந்த கொடுமைகளுக்குத்தான் இந்த மனுவை நான் தாக்கல் செய்துள்ளேன். நான் இந்த மனுவில் பல இடங்களில் முன்னுக்கு பின் முரணாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால் எனது மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 12.21 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.03.11 17:05:29 +0530

Judicial Magistrate No.2, Attur.